இருக்கின்றன. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்ன மாதிரி விரைவில் டாக்டர்கள் நியமிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கு. பெருமாள் : தலைவரவர்களே, அவசர கேஸ்களை எடுத்துக்கொண்டால் ஒரு நிரந்தரமான மருத்துவ அதிகாரி கிடைக்கின்ற வரையில் தற்காலிகமாக அந்த நகரில் இருந்து கொண்டு சிகிச்சை அளிக்க ஒரு மருத்துவரை நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அதைத்தான் சொன்னேன். இப்போது அருகாமையில், 20 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள எட்டையாபுரத்தில் 6 படுக்கைகளும், 35 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கோவில்பட்டியில் 30 படுக்கைகளும் கொண்ட மருத்துவமனைகள் இருக்கின்றன. இந்தக் குறையை உடனடியாக நிவர்த்தி செய்ய அரசாங்கம் ஆணையிடும்.

சத்தியமங்கலத்தில் தாலுகா மருத்துவமனை.

* வினா எண். 238—திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சத்தியமங்கலத்தில் புதிதாக தாலுகா அளவிலான பெரிய மருத்துவமனை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவரவர்களே, இது தாலுகாவாக மாற்றப்பட்டு 6 ஆண்டுகள் ஆகின்றன. அங்கே 6 படுக்கைகள் வசதியுடைய மருத்துவமனைதான் இருக்கிறது. அந்தப் பகுதியில் பின் தங்கிய மலைவாழ் மக்கள் அதிகமாக இருப்பதால் நடப்பாண்டிலேயே அதை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, அதற்காகத்தான் உள்ளூர் முக்கியஸ்தர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பெரியார் மாவட்டத்தில் இருக்கக் கூடிய மருத்துவ அலுவலரோடு தொடர்பு கொண்டு வருகிறார்கள். மேலும் மருத்துவ மனை கட்டுவதற்காக மருத்துவக் கட்டிடக் குழு மூலம் 25,000 ரூபாய் நன்கொடை வசூல் செய்திருக்கிறோம். இன்னும் 25,000 ரூபாய் வசூல் செய்யலாம் என்று எதிர்பார்க்கிறோம். கட்டிடம் கட்டுவதற்கு தகுதி வாய்ந்த நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, மருத்துவத் துறை அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டவுடன், மருத்துவமனை கட்டுவதற்கான செயற்குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

விளாத்திகுளம் வழியாக விரைவுப் பேருந்துகள்.

*வினா எண். 239—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னையில் இருந்து திருநெல்வேலி, தூத்துக்குடி செல்லும் திருவள்ளுவர் போக்குவரத்துக்கழக துரித வண்டிகளில் சிலவற்றை விளாத்திக்குளம், நாகலாபுரம், புதூர் வழியாக திருப்பி விடும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது முதல் நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 10-00].

திரு. ரா. கு. பெருமாள்: தலைவரவர்களே, முன்பே சட்டமன்ற உறுப்பினராக இருக்கும்போதும் இந்த அவையின் வாயிலாகவும், நேரடியாகவும், என்னுடைய தொகுதி வழியாக